DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. C.C. 166/2023
**Depositions of PW 1**

| Name | புளுகாயி அம்மாள் | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th Day of September 2025

**18-09-2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் நிறைமதி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆடு, மாடுகள் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம், தேதி ஞாபகமில்லை ஒருநாள் மாலை சுமார் 5.30 -6 மணியளவில் எனக்கு சொந்தமான ஆடு, மாடுகளை காட்டில் மேய்த்துக் கொண்டிருந்தேன். அப்போது எங்களது நாய் என்னுடன் வந்திருந்தது. எதிரியின் நாயும், எங்களது நாயும் சண்டை போட்டதால் எதிரி கம்பால் எனது நாயை அடித்தார். நான் எதிரியை பார்த்து எதற்காக நாயை அடிக்கிறாய் என சத்தம் போட்டேன். எதிரி என்னைப் பார்த்து முண்டை, தண்டை என பேசி, நாயை அப்படித்தாண்டி அடிப்பேன் என்று சொல்லி என்னையும் அடித்து கீழே தள்ளிவிட்டார். கீழே கிடந்த என்னை எதிரி காலல் இடுப்பில் மிதித்தார். தோள்பட்டையிலும் அடித்தார். நான் அய்யோ அம்மா என சத்தம் போட்டேன். அப்போது அருகே இருந்த எனது மகன் ஆண்டவர் ஓடிவந்து என்னை தூக்கினார். எனது மகன் ஆண்டவர் என்னை அழைத்துக் கொண்டு எம்.புதுப்பட்டி ஆரம்ப சுகாதார

நிலையத்திற்கு அழைத்துச் சென்றான். நான் சிகிச்சையிலிருந்தபோது எம்.புதுப்பட்டி போலீஸார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் எதிரி ரவிகண்ணனுக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாள், நேரம்,இடத்தில் வைத்து எனது மகன் ஆண்டவர் என்பவர் எதிரியை அசிங்கமாக பேசி, இரும்பு கம்பியால் எதிரியின் தலையில் அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 78/2023 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எதிரி ரவிகண்ணன் எனது மகனால் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. என் மகன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதால் நான் எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் அளித்து அதனால் எதிரி மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லையென்றும், சம்பவ இடத்தில் நான் இருந்ததாகவும், எதிரி என்னை அசிங்கமக பேசி, தாக்கியதாகவும் பொய்யான சங்கதியை கூறி எதிரி மீது புகார் அளித்தேன் என்றும், அதற்காதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னை எம்.புதுப்பட்டி அரசு மருத்துவமனைக்கு யார் அழைத்துச் சென்றது என்றால் எனது மகன் மற்றும் எனது பேரன் பொன்மலை ஆகியோர் அலைத்துச் சென்றார்கள். எதிரிக்கும் இந்த

வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI

Case No. C.C. 166/2023

**Depositions of PW 3**

| Name | தங்கமுனி | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th Day of September 2025

<u>18-09-2025</u>

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் நிறைமதி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.-1 புளுகாயி அம்மாள் எனது தாயார் ஆவார். அ.சா.-2 ஆண்டவர் எனது உடன் பிறந்த தம்பி ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலை 5 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது, எனது தாயார் எனது ஊரைச் சார்ந்த ஒரு பெண்ணிடம் தன்னை எதிரி ரவிகண்ணன் அடித்து விட்டதாக தகவல் சொல்லியுள்ளார். அந்த பெண் என்னிடம் தகவல் சொன்னதன் பேரில், எம்.புதுப்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு எனது அம்மாவை சேர்த்திருந்தார்கள். எனது அம்மாவிற்கு உடம்பில் அடிபட்டிருந்தது. எனது அம்மாவிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது, நாய்கள் சண்டை போட்டதாகவும், அதை கேட்டதற்கு எதிரி ரவிகண்ணன் அடித்துவிட்டதாகவும் கூறினார். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு தகவல் சொன்னதாக கூறப்படும் பெண்ணின் பெயர்

என்னவென்றால் பொண்மணி ஆகும். சம்பவ இடத்தில் வைத்து எனது அம்மா பொன்மணியிடம் தகவல் சொல்லி, பொன்மணி என்னிடம் வந்து தகவல் சொன்னார். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து எதுவும் கேள்விப்படவில்லை என்றாலும், எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. C.C. 166/2023
**Depositions of PW 2**

| Name | ஆண்டவர் | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th Day of September 2025

**18-09-2025**
எதிரி ஆஜர்.
**முதல் விசாரணை**

நான் நிறைமதி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சிவகாசியில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன். அ.சா.-1 புளுகாயி அம்மாள் எனது தாயார் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 24-05-2023 ஆம் தேதி மாலை சுமார் 5.45 மணியளவில் நானும், எனது அம்மாவும் காட்டில் ஆடு, மாடுகள் மேய்த்துக்கொண்டிருந்தோம். அப்போது நாங்கள் வளர்த்து வந்த நாயும் எங்களுடன் வந்திருந்தது. அப்போது அங்கு எதிரியின் நாயும் எங்கள் நாயும் சண்டை போட்டது. எதிரி தனது கையில் வைத்திருந்த கத்தி கம்பால் எனது நாயை அடித்தார். அதில் நாயுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அப்போது அங்கிருந்த என் தாயார் எதிரியிடம் எதற்காக நாயை அடித்தாய் என கேட்டார். அதனால் எதிரி எனது அம்மாவைப் பார்த்து அடியே முண்டை, கிழட்டு முண்டை உன்னை அடித்சுக் கொன்னுடுவேன்டி என்று பேசினார். எதிரி ரவிகண்ணன் என் அம்மாவை அடித்து கீழே தள்ளிவிட்டு, எனது அம்மாவை வலது தோள்பட்டை, இடுப்பு மற்றும் தொடையில் மிதித்தார். அப்போது அங்கிருந்த நான் எதிரியை கேட்டதற்கு, உன்னையும் கொன்னுடுவேன்,

உன் அம்மாவையும் கொன்னுடுவேன் என்று மிரட்டினார். நான் உடனே ஊருக்குள் சென்று வீட்டிலிருந்த எனது மாப்பிள்ளை பொன்மலை என்பவரை அழைத்துக் கொண்டு வந்து இருசக்கர வாகனத்தில் எனது அம்மாவை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். சிவகாசி அரசு மருத்துவமனையில் எனது தாயார் சிகிச்சையில் இருந்தபோது எம்.புதுப்பட்டி போலீஸார் அங்கு வந்து விசாரித்தனர். சம்பவம் தொடர்பாக எனது அம்மா போலீஸாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தார். இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நாங்கள் ஆடு மேய்த்து கொண்டிருந்ததாக கூறப்படும் இடத்திற்கு அருகே யார் யாருடைய தோட்டம் உள்ளது என்றால் வடக்கே எதிரி ரவிகண்ணனின் தோட்டம், தெற்கே எங்களது இடமும், அருகில் எங்களது உறவினர்கள் இடமும் உள்ளது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் எதிரியின் தோட்டம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயம் எதிரியின் தோட்டத்தில் சீமைப் புல் விளைந்திருந்தது என்றால் சரியல்ல, உழவடித்துப் போட்டிருந்தார்கள். எதிரியின் தோட்டத்தை சுற்றி மற்றவர்களின் நிலம் உள்ளது என்றால் சரிதான். எதிரி தோட்டத்தை சுற்றியுள்ள இடத்தில் எங்களுக்கு அல்லது எங்களது உறவினர்களுக்கு இடம் உள்ளதா என்றால் தெற்கு பக்கம் எனது பெயரில் உள்ள இடம் உள்ளது.

2) மேற்படி தோட்டத்திற்கு அருகில் குடியிருப்புகள் எதுவும் இல்லையென்றால் சரிதான், அரை கிலோ மீட்டர் தள்ளி குடியிருப்பு வீடுகள் உள்ளது. நாங்கள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தது யாருடைய இடத்தில் என்றால் எங்களது இடத்தில்தான் ஆடு மேய்த்துக்

கொண்டிருந்தோம். எங்களது நிலத்தில் என்ன பயிரிடப்பட்டிருந்தது என்றால் தரிசாகத்தான் இருந்தது. பொன்மாலை என்பவரை நான் அழைத்து வந்து எனது அம்மாவை அழைத்துக் கொண்டு சென்றதாக கூறப்படும் சமயம் நேரம் என்னவாக இருக்கும் என்றால் மாலை 6 – 6.30 மணி இருக்கும். நாங்கள் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு வரும்போது நேரம் என்னவாக இருக்கும் என்றால் இரவு சுமார் 7.30 மணி இருக்கும். என் அம்மாவை சிகிச்சைக்காக மருத்துவமனைக்குள் அழைத்துச் சென்றது யார் என்றால் நானும், பொன்மலையும் அழைத்துச் சென்றோம்.

3) நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், சம்பவ இடத்திலிருந்து எனது அம்மாவை மருததுவமனைக்கு அழைத்துச் சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பொன்மலை என்பவர் மட்டும்தான் எனது அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் என் அம்மாவிற்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை யார் சொன்னது என்றால் நான், பொன்மலை, மற்றும் எனது அண்ணன் தங்கமணி ஆகியோர் சொன்னார்கள். எனக்கும் எதிரிக்கும் முன்விரோதம் எதுவும் கிடையாது என்றால் நாங்கள் எதிரி குடும்பத்தினருடன் பேசுவதில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து எனது அம்மா எதிரியால் தாக்கப்படவில்லை என்றும், சம்பவ இடத்தில் நான் இருந்ததாக கூறுவது பொய் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.